# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை


## 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.10.13 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# சமுதாயஞ்சார் சீர்திருத்தம் (திருத்தம்)

**1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 44.00 தபாற் செலவு : ரூபா 150.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம், அத்தகைய வேறு அலுவலர்களின் நியமித்தலை உள்ளடக்குவதற்கு சட்டத்தின் நோக்கெல்லையை விரிவுபடுத்துவதன் மூலம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டத்தின் விரிவுப் பெயரினைத் திருத்துகின்றது.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் I இன் தலைப்பைத் திருத்துகின்றது என்பதுடன் வாசகம் 4 இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையுமாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், சமுதாய சீர்திருத்த அலுவலர்களை நியமிப்பதற்கு ஏற்பாடுசெய்வதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 5*** : இவ்வாசகம், அப்பிரிவின் நோக்கங்களுக்காக சமுதாய சீர்திருத்த அலுவலர்களை உள்ளடக்குவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவையும் அதன் ஓரக்குறிப்பையும் திருத்துகின்றது.

***வாசகம் 6*** : இவ்வாசகம், சமுதாய சீர்திருத்த அலுவலர்களை உள்ளடக்குவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துகின்றது. அதன்மூலம் 4 ஆம் பிரிவின் கீழான ஆணையாளரின் கட்டுப்பாட்டை அத்தகைய அலுவலர்களுக்கு விரிவுபடுத்துகின்றது.

***வாசகம் 7***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துகின்றது. அதன்மூலம் விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளை செய்கின்ற நோக்கங்களுக்காக அலுவலர்கள் மட்டுமே ஆணையாளரின் அதிகாரத்தின்கீழ் செயல்படலாம் என்பதை குறித்துரைக்கின்றது.

***வாசகம் 8*** : இவ்வாசகம், கட்டளையை தெளிவுபடுத்துவதற்கு சமுதாய சீர்திருத்த அலுவலருக்கு தவறாளரை ஆற்றுப்படுத்துவதற்கு நீதிமன்றத்துக்கு ஏற்பாடு செய்வதற்காகவும் தவறாளர் அதற்கு சம்மதிக்கின்றாரா என்பதை குறித்துக்காட்டுவதற்கு நாப்பத்தெட்டு மணித்தியால காலப்பகுதியை அனுமதிப்பதற்காகவும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 9***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் வாசகம் 4 இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையுமாகும்.

***வாசகம் 10*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் வாசகம் 4 இனால் செய்யப்பட்ட திருத்தத்துக்கான விளைவாந்தன்மையுமாகும்.

***வாசகம் 11*** : இவ்வாசகம், குற்றப்பணத்தை ஐந்தாயிரம் ரூபாவிலிருந்து இருபத்தைந்தாயிரம் ரூபாவாக அதிகரிப்பதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 12***: இவ்வாசகம், இருந்துவருகின்ற குற்றப்பண வரம்பெல்லையை அதிகரிக்கும் பொருட்டு முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையை திருத்துகின்றது.

ச.வ.– ஓ 22/2025

## 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்தச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்த (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்துக்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்துக்கான விரிவுப்பெயரானது, “சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் ஒருவரை நியமிப்பதற்கும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் ஒருவரையும் அத்தகைய வேறு அலுவலர்களையும் நியமிப்பதற்கும்” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் பாகத்தின் தலைப்பை மாற்றீடு செய்தல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் பாகத்தின் 2 ஆம் பிரிவுக்கு உடன்முன்னர் தோன்றும் தலைப்பை, இத்தால் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் தலைப்பு இடப்படுகின்றது:-

> “சமுதாயஞ்சார் சீர்திருத்த ஆணையாளர் மற்றும் வேறு அலுவலர்கள்”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் “சமுதாயஞ்சார் சீர்திருத்த பிரதி ஆணையாளர்களும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “சமுதாயஞ்சார் சீர்திருத்த பிரதி ஆணையாளர்களும் உதவி ஆணையாளர்களும் சமுதாயச் சீர்திருத்த அலுவலர்களும்” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

PL15960 - 470 (2026/10)

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது, பின்வருமாறு இத்தாற் திருத்தப்படுகின்றது:-

(1) "சமுதாயஞ்சார் சீர்திருத்த பிரதி ஆணையாளர் ஒவ்வொருவரும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உதவி ஆணையாளர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமுதாயஞ்சார் சீர்திருத்த பிரதி ஆணையாளர் ஒவ்வொருவரும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உதவி ஆணையாளர் ஒவ்வொருவரும் சமுதாயச் சீர்திருத்த அலுவலர் ஒவ்வொருவரும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக் குறிப்பில், "பிரதி ஆணை யாளர்களும் உதவி ஆணையாளர்களும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பிரதி ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் மற்றும் சமுதாயச் சீர்திருத்த அலுவலர்கள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது, (அ) என்னும் பந்தியில் "சமுதாயஞ்சார் சீர்திருத்த உதவி ஆணையாளர் மீதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமுதாயஞ்சார் சீர்திருத்த உதவி ஆணையாளர் மீதும் சமுதாயச் சீர்திருத்த அலுவலர்கள் மீதும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "அவரினால் அதிகாரம ளிக்கப்பட்ட எவரேனும் ஆள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவு என்றவாறாக அப்பிரிவை மீள் இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் மீள் இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவுகளை சேர்ப்பதன் மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவின் கீழ் சமுதாயஞ்சார் சீர்திருத்தக் கட்டளையின் நன்மைகளை அத்தகைய தவறாளருக்குத் தெரிவிப்பதற்கு நீதிமன்றத்துக்கு குறித் தளிக்கப்பட்ட சமுதாயச் சீர்திருத்த அலு வலருக்கு நீதிமன்றமானது தவறாளரைக் குறிப்பீடுசெய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தவறாளர், அவர் தொடர்பில் ஆக்கப்படுகின்ற அத்தகைய கட்டளை யொன்றுக்கு அவர் சம்மதிக்கிறாரா என்பதை நீதிமன்றத்துக்கு தெரிவித்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் நோக்கத் துக்காக, நீதிமன்றமானது தவறாளரை சமுதாயச் சீர்திருத்த அலுவலருக்கு குறிப் பீடுசெய்கின்ற நேரத்திலிருந்து தொடங்கி சனிக்கிழமைகள், ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் பகிரங்க விடுமுறைகள் தவிர்ந்த நாற்பத்தெட்டு மணிநேர தொடர்ச்சியான காலப்பகுதியை வழங்குதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் அலுவலருக்கு தவறாளர் முறைப்படி தனது வருகையைத் தெரிவித்தல் வேண்டும் என்பதுடன் அவர் வந்து பார்வை யிடக்கூடியதாக இருத்தலும் வேண்டும்"

என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமுதாயச் சீர்திருத்த அலுவலருக்கு அல்லது சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் அலுவலருக்கு தவறாளர் முறைப்படி தனது வருகையைத் தெரிவித்தல் வேண்டும் என்பதுடன் அவர் வந்து பார்வையிடக்கூடியதாக இருத்தலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்:-

(அ) உட்பந்தி (i) இல், "சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதி காரியினால் பணிக்கப்பட்டவாறாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமுதாயச் சீர்திருத்த அலுவலரினால் அல்லது சமுதாயஞ்சார் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதிகாரியினால் பணிக்கப்பட்டவாறாக" என்னும் சொற் களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) உட்பந்தி (ii) இல், "ஆணையாளரி னால் பதவிப் பெயர் குறிக்கப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக் களத்தின் அலுவலர் ஒருவரின் மேற்பார்வையின்கீழ்" என்னும் சொற் களுக்குப் பதிலாக "சமுதாயச் சீர்திருத்த அலுவலகரின் அல்லது ஆணை யாளரினால் பதவிப் பெயர் குறிக்கப் பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் அலுவலர் ஒருவரின் மேற்பார்வையின்கீழ்" என்னும் சொற் களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, "சமுதாயச் சீர்திருத்த நிலையத்தின் பொறுப்பதிகாரி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமுதாயச் சீர்திருத்த அலுவலர், ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவல

ரொருவர் அல்லது சமுதாயச் சீர்திருத்த நிலையத்தின் பொறுப் பதிகாரி” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்ட வாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் “ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கு” என்னும் சொற்களுக்கு பதிலாக “இருபத்தைந்தாயிரம் ரூபாவை விஞ்சாததான குற்றப்பணமொன்றுக்கு” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்ட வாக்கத்தின் அட்டவணையை மாற்றீடு செய்தல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை இத்தாற் நீக்கப்படுகிறது என்பதுடன் அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:-

**“அட்டவணை**

**[பிரிவு 9(3)]**

| | *நிரை I* | *நிரை II* |
|---|---|---|
| | **மறியற்றண்டனையின் கால அளவு அல்லது குற்றப் பணத்தின் தொகை** | **கொடுப்பனவற்ற சமுதாய வேலைக் காலப்பகுதி** |
| 1. | ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்துக்கு மேல் | 1 வருட காலப்பகுதிக்கு 200 தொடக்கம் 300 மணித்தியாலங்கள் |
| 2. | ஆறு மாதங்கள் அல்லது ஆறு மாதங்களுக்கு மேல் ஆனால் 1 வருடத்தை விடக் குறைய | 6 மாதக் காலப்பகுதிக்கு 100 தொடக்கம் 200 மணித்தியாலங்கள் |
| 3. | ஆறு மாதங்களை விடக் குறைய | 3 மாதக் காலப்பகுதிக்கு 50 தொடக்கம் 100 மணித்தியாலங்கள் |
| 4. | ஐம்பதாயிரம் ரூபா | இரண்டு வருட காலப்பகுதிக்கு 200 தொடக்கம் 300 மணித்தியாலங்கள் |
| 5. | நாற்பதாயிரம் ரூபா அல்லது அதற்கு மேல் ஆனால் ஐம்பதாயிரம் ரூபாவிற்கு குறைய | ஒன்றரை வருட காலப்பகுதிக்கு 150 தொடக்கம் 200 மணித்தியாலங்கள் |
| 6. | முப்பதாயிரம் ரூபா அல்லது அதற்கு மேல் ஆனால் நாற்பதாயிரம் ரூபாவிற்கு குறைய | ஒரு வருட காலப்பகுதிக்கு 75 தொடக்கம் 150 மணித்தியாலங்கள் |

| | *நிரை I* | *நிரை II* |
|---|---|---|
| | **மறியற்றண்டனையின் கால அளவு அல்லது குற்றப் பணத்தின் தொகை** | **கொடுப்பனவற்ற சமுதாய வேலைக் காலப்பகுதி** |
| 7. | இருபதாயிரம் ரூபா அல்லது அதற்கு மேல் ஆனால் முப்பதாயிரம் ரூபாவிற்கு குறைய | ஆறு மாதக் காலப்பகுதிக்கு 50 தொடக்கம் 75 மணித்தியாலங்கள் |
| 8. | இருபதாயிரம் ரூபாவிற்கு குறைய | மூன்று மாதக் காலப்பகுதிக்கு 50 தொடக்கம் 75 மணித்தியாலங்கள் |

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.